DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்**. 205/2018

**அ.சா.**– 4

| | |
|---|---|
| பெயர் : திரு. ராஜசேகர் | கிராமம் : |
| த/பெ. : திரு. ஆறுமுகம் | தொழில்: |
| வயது : | மதம்: |
| | ஜாதி: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 1st day of November, 2022.

**முதல்விசாரணை**:–

நான் கொங்குப்பட்டி கிராமத்தில் குடியிருக்கிறேன். கொத்தனார் வேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன திருப்பதி என் அக்கா மகன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. 5 வருடங்களுக்கு முன்பு ஆய்வாளர் வழக்கு சம்பவ இடத்தைப் பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜரில் நானும் முனுசாமியும் கையெழுத்திட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.–2**. பின்பு ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து இரத்தம் படிந்த மண், மற்றும் இரத்தம் படியாத மண் ஆகியவற்றை பாலிதீன் பைகளில் சேகரித்து ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயாரித்தார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் முனுசாமியும் கையெழுத்திட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் – **அ.சா.ஆ.–3.** இரத்தம் படிந்த மண் –**சா.பொ.–2**. இரத்தம் படியாத மண் **சா.பொ.–3**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை (எதிரி தரப்பில்)**:–

இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு இரவே தகவல் வந்துவிட்டது. அ.சா.–1 பொன்னம்மாள் என் சித்தப்பா மகள். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது சுமார்

50 பேர் இருந்திருப்பார்கள் என்றால் சரியல்ல. போலீசார் மட்டும் இருந்தனர். சம்பவ இடத்தில் சுற்றிலும் பல இடங்களில் இரத்தக்கறை படிந்திருந்தது என்றால் சரியல்ல. ஒரு இடத்தில் இரத்தக்கறை படிந்திருந்தது. அந்த இடத்திலிருந்து சிறிது தூரம் இரத்தக்கறை காணப்பட்டது. ஒரு இடத்தில் மட்டும் இரத்தக்கறை படிந்திருந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்பும் சாட்சி முனுசாமி முன்பும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டதாகவும், இரத்தக்கறை படிந்த மற்றும் படியாத மண் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டதாகவும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன திருப்பதி என் நெருங்கிய உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுமுதல்விசாரணை இல்லை.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.
**அமர்வு வழக்கு எண்.** 205/2018

**அ.சா.–** 5

| | |
|---|---|
| பெயர் : திருமதி. வசந்தா | கிராமம் : |
| க/பெ. : (லேட்) திரு. திருப்பதி | தொழில்: |
| வயது : | மதம்: |
| | ஜாதி: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 1st day of November, 2022.

**முதல்விசாரணை**:–

நான் தற்போது தீவட்டிப்பட்டி காவல் நிலையம் அருகில் குடியிருக்கிறேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோனதாக சொல்லப்படும் திருப்பதி என்கணவர். வழக்கு சம்பவ சமயத்தில் நான் என் கணவர் மற்றும் குழந்தைகளுடன் பூசாரிப்பட்டி, வைரன்காட்டில் என் கணவரின் பெற்றோர் வீட்டில் குடியிருந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். எதிரி என் உறவினர். என் கணவரும் எதிரியும் கொத்தனார் வேலை செய்து வந்தார்கள். 15 வருடங்களுக்கு முன்பு நான் என் கணவரை காதலித்து திருமணம் செய்தேன். என் கணவரும் அ.சா.–2 கோவிந்தராஜும் கொத்தனார் வேலைக்கு செல்வார்கள். கோவிந்தராஜ்க்கு நித்யா என்பவருடன் திருமணம் நடைபெற்றது. என் கணவருக்கு நித்யாவுடன் தொடர்பு இருந்தது. நித்யா தன் கணவருடன் தகராறு செய்து கொண்டு தனிக்குடித்தனம் சென்றுவிட்டார். என் கணவர் கஞ்சா, மது ஆகியவற்றிற்கு அடிமையாகிவிட்டார். குடும்பத்தைப் பராமரிக்கமாட்டார்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**குறுக்குவிசாரணை(அரசு தரப்பில்):–**

ஆய்வாளர் என்னை விசாரித்தபொழுது எதிரிக்கும் எனக்கும் முதலில் பழக்கம் ஏற்பட்டது என்றும், பின்பு அது கள்ளத்தொடர்பாக மாறிவிட்டது என்றும், இது சம்மந்தமாக எனக்கும் என் கணவருக்கும் அடிக்கடி தகராறு வரும் என்றும், என் கணவர் என்னை எதிரியுடனான கள்ளத்தொடர்பை கைவிட சொன்னார் என்றும், எதிரியிடம் நான் அவ்வப்பொழுது பண உதவி பெற்று வந்தேன் என்றும், 4.4.2017 ம் தேதி பீடி வாங்க சென்ற என்கணவர் பின்னால் கோவிந்தராஜ் மற்றும் கௌதம் ஆகியோர் சென்றனர் என்றும், நான் சென்று பார்த்தபொழுது என் கணவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார் என்றும், பின்பு சிகிச்சைக்காக என் கணவரை சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்ததாக சொல்லியுள்ளேன் என்றும், தற்பொழுது எதிரியுடன் உள்ள கள்ளத்தொடர்பை மறைப்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை(எதிரி தரப்பில்)</u>:–

எதிரி தனபால் என் திருமணத்தை முன்நின்று நடத்தி வைத்தார். என் கணவர் சந்தேகபுத்தி கொண்டவர் என்றால் சரிதான். 04.04.2017 ம் தேதி மாலை நான், என்கணவர், என் அப்பா சின்னப்பையன், கௌதமன், அவர் மனைவி ரேவதி, என் மாமியார் பொன்னம்மாள், மாமனார் தங்கராஜ் ஆகியோர் என் மாமியார் வீட்டில் இருந்தோம். அ.சா.–2 கோவிந்தராஜ் என் கணவரை வீட்டிலிருந்து அழைத்துச் சென்றார். அவ்வாற சென்றபொழுது கோவிந்தராஜ் கையில் வீச்சரிவாள், என் கணவர் கையில் தொன்னை, கௌதமன் கையில் அரிவாள்மனை ஆகியவை இருந்தன. வழக்கு சம்பவத்திற்கு 15 நாட்களுக்கு முன்பு என் கணவரை சேலம் அரசு மருத்துவமனையில் போதை மறுவாழ்வு மையத்தில் சேர்த்திருந்தோம். அன்றையதினம் ஜெயிலில் வைத்திருப்பது போன்று போதை மறுவாழ்வு மையத்தில் வைத்துவிட்டார்கள் என்று என்கணவர் கோபப்பட்டார். அதனால் என் கணவருடன் அனைவருடனும் சண்டைபோட்டார். எதிரியும் ஒரு பழனி என்பவரும் என்கணவரை போதை மறுவாழ்வு மையத்தில் சேர்த்ததாக பிரச்சனை வந்தது. சத்தம்கேட்டு நான் சென்று பார்த்தபொழுது என்கணவர் தண்ணீர் தொட்டிக்கு அருகில்

வெட்டுக்காயங்களுடன் கிடந்தார். அப்பொழுது எதிரியும் அவரது அம்மாவும் எதிரியின் வீட்டிற்குள் இரத்தக்காயங்களுடன் இருந்தார்கள். எதிரி மற்றும் அவரது தாயாரின் சத்தத்தைக் கேட்டு தண்ணீர் தொட்டிக்கு அருகில் சென்றேன். அவ்வாறு நான் சென்றபொழுது அங்கு சுமார் 30 பேர் வந்தார்கள். எதிரி என் அண்ணன் மாதிரி என்றால் சரிதான்.

**மறுமுதல்விசாரணை (அனுமதியுடன்)**

எதிரியை காப்பாற்றுவதற்காக குறுக்குவிசாரணையில் மேற்கண்ட தகவல்களை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தற்பொழுதும் எதிரியுடன் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.
**அமர்வு வழக்கு எண்.** 205/2018

**அ.சா.**– 6

| | |
|---|---|
| பெயர் : திரு. வெங்கடாசலம் | கிராமம் : |
| த/பெ. : திரு. காசிநாதன் | தொழில்: |
| வயது : | மதம்: |
| | ஜாதி: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 1st day of November, 2022.

**<u>முதல்விசாரணை</u>**:–

நான் தீவட்டிப்பட்டியில் குடியிருக்கிறேன். கொத்தனார் வேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன திருப்பதி தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. கையெழுத்து வாங்கினார். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள கையொப்பங்கள் மட்டும் என்னுடையவை. அவை முறையே **அ.சா.ஆ.–4, 5**. அவற்றில் உள்ள விவரங்கள் தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**<u>குறுக்குவிசாரணை(அரசு தரப்பில்)</u>:–**

ஆய்வாளர் என்னை விசாரித்தபொழுது 07.04.2017ம் தேதி பிற்பகல் 12 மணியளவில் நானும், விக்னேஷ் என்பவரும் தாராபுரம் அரசு பள்ளி அருகில் நின்றுகொண்டிருந்ததாகவும், ஆய்வாளர் எங்களை அழைத்ததாகவும், ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் ஆஜர் எதிரியை கைது செய்து விசாரித்ததாகவும், அப்பொழுது எதிரி தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரி 07.04.2017ம் தேதி

பிற்பகல் 2.30 மணியளவில் வைரன்காடு அருகே உள்ள ராசிபுரத்தான் காட்டுவளவிற்கு செல்லும் சாலையின் அருகே வாசு என்பவரின் நிலத்தில், ஒரு செயல்படாத பெட்டிக்கடையின் அடியிலிருந்து எதிரி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர்செய்த ஒரு வெள்ளை நிற பாலிதீன் பையில் இரத்தக்கறை படிந்த மஞ்சள் நிற கருப்பு வெள்ளை கோடுபோட்ட அரைக்கை சட்டை ஒன்று, இரத்தக்கறை படிந்த நீல நிற கருப்பு வெள்ளை கோடுபோட்ட மூட்டப்பட்ட லுங்கி மற்றும் இரத்தக்கறை படிந்த இரும்பு வீச்சரிவாள் ஆகியவற்றை கைப்பற்றினார் என்றும், அப்பொழுது நானும் சாட்சி விக்னேசும் உடனிருந்து கையொப்பமிட்டோம் என்றும், தற்போது எதிரி கேட்டுக்கொண்டதன்பேரில், எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை(எதிரி தரப்பில்):-**

ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பமிட்டேன்.

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.